FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301661

1. District : மாவட்டம் Trichy | PS: காவல்நிலையம் Trichy VSBC | Year: ஆண்டு 2026 | FIR No.: மு.த.அ. எண் 23 | Date: நாள் 30.6.2026

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act (as amended in 2018) Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் 23.6.2026 1915 26.6.2026 Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 1115 Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.6.2026 Time : நேரம் 1130 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் G.D. Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Computer Typed Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் O/o the District Educational Officer Trichy Educational District

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி 3rd West

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் C. Elamurugu (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Chockalingam

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 8.4.1969 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் School Teacher (g) Address : முகவரி 64/2 Mullai Street, Ezhilnagar, Trichy-4

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Pushpavalli, Head Master i/c District Educational officer, Trichy Educational District, Trichy

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் No Delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 30.6.2024 14.00 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் G. SHANMUGAM
Rank: நிலை Inspector of Police No. எண் .....

மாண்புமிகு மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.13/2026–இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.....

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 30.06.2026ந்தேதி பணியில் இருந்தபோது, முற்பகல் 11.30 மணியளவில் திருச்சி–14, கைலாசபுரம், எழில் நகர், முல்லை தெரு, எண்.64/2, என்ற முகவரியில் வசித்து வரும் சொக்கலிங்கம் மகன் திரு.C.இளமுருகு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அனுமதி பெற்று அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை ரகசியமாக செய்து, புகார்மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி மாவட்ட கல்வி அலுவலர் திரு.புகழேந்தி மற்றும் புகார்தாரர் திரு.இளமுருகு ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்து எதிரியின் கெட்ட நடத்தையை உறுதி செய்துகொண்டு, பின்னர் இன்று 30.06.2026 13.30 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.13/2026 சட்டப்பிரிவு 7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988(as amended in 2018)–ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் C.இளமுருகு, வயது 57, த/பெ.சொக்கலிங்கம், எண்.64/2, முல்லை தெரு, எழில் நகர், கைலாசபுரம், திருச்சி–14 பெறுநர் உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகம், திருச்சி. ஐயா, நான் திருச்சி, கைலாசபுரம், எழில் நகர், முல்லை தெருவில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் திருச்சி, திருவெறும்பூர், ஆர்.எஸ்.கே. மேல்நிலைப்பள்ளியில் கடந்த 23 ஆண்டுகளாக தமிழ்த்துறையில் பணிபுரிந்து வருகிறேன். எனது மனைவியின் பெயர் தேவி. அவர் திருச்சி, பாய்லர் பிளாண்ட் அரசு உதவி பெறும் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் கணித பட்டதாரி ஆசிரியையாக பணிபுரிந்து வருகிறார், எனது மனைவிக்கு TET தேர்வை முடிக்கவில்லை எனக்கூறி கடந்த 2020 ஆம் வருடம் முதல் வருடாந்திர ஊதிய உயர்வை அப்போதைய மாவட்ட கல்வி அலுவலரின் உத்தரவின் பேரில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் 29.07.2011க்கு முன்பு ஆசிரியர் பணியில் சேர்ந்தவர்களுக்கு TET தேர்வு தேவையில்லை என்றும், அந்த ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வை வழங்கலாம் என்று சென்னை உயர்நீதிமன்றம் WA No.313 of 2022 நாள்.02.06.2023 உத்தரவின்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் எனது மனைவி தேவி கடந்த நவம்பர் மாதம் 2025ல் நடந்த TET தேர்வில் தேர்ச்சி பெற்று விட்டார். இந்த விபரங்களை குறிப்பிட்டும், ஊதிய உயர்வு கேட்டும் கடந்த 04.10.2024ந்தேதி மாவட்ட கல்வி அலுவலர் திருச்சி அவர்களுக்கு பாய்லர் பிளாண்ட் பெண்கள் மேல்நிலைப்பள்ளி வழியே விண்ணப்பித்திருந்தார். அதன்பிறகு, TET தேர்வில், தேர்ச்சி பெற்றிருந்த விபரமும் பள்ளி வழியே தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனாலும், வருடாந்திர ஊதிய உயர்வு உத்திரவிடப்படாமல் நிலுவையில் இருந்து வந்தது. கடந்த 23.06.2026ந்தேதி மாலை சுமார் 07.15 மணியளவில் நான் எனது மனைவியின் சார்பாக திருச்சி மாவட்ட கல்வி அலுவலர் அலுவலகத்திற்கு சென்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஊதிய உயர்வு தொடர்பாக DEO திரு.புகழேந்தி

அவர்களை அவரது இருக்கையில் சந்தித்து எனது மனைவிக்கு கிடைக்க வேண்டிய வருடாந்திர ஊதிய உயர்வு மற்றும் நிலுவைத் தொகை கிடைக்க ஏற்பாடு செய்து தருமாறு கேட்டபோது, DEO திரு.புகழேந்தி உங்களது மனைவி திருமதி.தேவி தொடர்பான ஊதிய உயர்வு, நிலுவைத்தொகை தொடர்பான கோப்பு தன் அலுவலகத்திற்கு வந்துள்ளதாகவும், தான் கையொப்பம் இட்டால் அது உடனே தங்களுக்கு கிடைத்துவிடும் என்றும், அதற்காக தனக்கு தனியா ரூ.30,000/- கொடுக்க வேண்டும் என்று கேட்டார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை, ஆனாலும் எனது மனைவியிடம் கேட்டுவிட்டு சொல்கிறேன் சார் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் கடந்த 26.06.2026ந்தேதி காலை சுமார் 11.15 மணியளவில் DEO திரு.புகழேந்தி அவரது செல்போன் எண்.9442845944 லிருந்து எனது செல்பேசிக்கு தொடர்பு கொண்டு தான் மங்கள் & மங்கள் கடையில் இருப்பதாகவும் அங்கு வந்து. தான் ஏற்கனவே கேட்ட ரூ.30,000/-த்தை கொடுத்துவிட்டு செல்லும்படியும், தான் வருகிற திங்கள் கிழமை உங்களது வேலையை செய்து கொடுத்துவிடுவதாகவும் கூறினார். நான் சிறிது நேரத்தில் அவரை தொடர்பு கொண்டு, உடனே அவ்வளவு பணம் என்னிடம் இல்லை சார், என் மனைவியிடம் கேட்டுவிட்டு, நான் தங்களை சந்திக்கிறேன் என்று கூறினேன். இந்நிலையில் நான் 29.06.2026ந் தேதி காலை சுமார் 11.45 மணியளவில் DEO திரு.புகழேந்தியை அவரது செல்போன் எண்.9442845944ற்கு தொடர்பு கொண்டு, பணம் இல்லாம செஞ்சு கொடுங்க சார் என்று அவரிடம் கேட்டேன். அவர் ரூ.30,000/- கண்டிப்பாக வேண்டும் அப்பொழுதுதான் திருமதி.தேவியின் ஊதிய உயர்வு கோப்பில் கையொப்பம் இடுவேன், பணம் கொடுக்கலன்னா நீங்க அலைஞ்சிகிட்டு இருக்க வேண்டியதுதான் என்று கறாராக கூறினார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லை, இருந்தபோதிலும் அப்போதைக்கு சரிங்க சார் ரூ.30,000/-த்தை தயார் செய்து கொண்டு வந்து உங்களை பார்கிறேன் என்று கூறிவிட்டேன். பின்னர் இந்த விபரங்களை எனது மனைவி தேவியிடம் கூறினேன். அவர் நீங்கள் லஞ்சம் எதுவும் கொடுக்க வேண்டாம், உங்களிடம் லஞ்சம் கேட்ட திருச்சி DEO திரு.புகழேந்தி மீது லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் செய்து நடவடிக்கை எடுக்குமாறு கூறினார். நான் DEO திரு.புகழேந்தி கேட்ட லஞ்சப்பணம் ரூ.30,000/-த்தை தயார் செய்து கொண்டேன். எனது மனைவி திருமதி.தேவியின் ஊதிய உயர்வு தொடர்பான கோப்பில் நடவடிக்கை எடுக்க ரூ.30,000/- கையூட்டு கேட்ட திருச்சி மாவட்ட கல்வி அலுவலர் திரு.புகழேந்தி மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (சொ.இளமுருகு) 30/6/26. Submitted to the Court of Hon'ble Principal District and Sessions Judge Tiruchirappalli. Received this report at 11.30 Hrs. on 30.6.2026 and obtained permission from DVAC and made Confidential Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.13/2026 u/s 7(a) Prevention of Corruption Act 1988 (as amended in 2018) at 13.30 Hrs. on 30.06.2026. Sd.xxx (G.SAKTHIVEL) 30.6.2026 Inspector of Police V&AC Trichy.

30.6.2026